**தமிழச்சி தங்கபாண்டியன்**
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

# புவிசார் குறியீடு அங்கீகாரம்: நிலுவை பொருள்கள் பட்டியல் விவரம் தேவை திமுக. உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கோரிக்கை

புதுடெல்லி, ஏப்ரல் 12

தமிழ்நாட்டில் இருந்து புவிசார் குறியீடு அங்கீகாரம் கோரி ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ள பொருள்களின் விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.

**இது குறித்து மக்களவையில் கடந்த 5-ஆம் அவர் எழுப்பிய கோரிக்கை விவரம் வருமாறு..**

தமிழ்நாட்டில் இருந்து புவிசார் குறியீட்டுக்கு அங்கீகாரம் கோரி ஒன்றிய அரசின் பரிசீலனையில் உள்ள பொருள்கள் பற்றிய விவரம், அவை எந்த வகையைச் சேர்ந்தவை, அந்த விண்ணப்பங்கள் தொடர்பான தற்போதைய நிலை ஆகிய விவரங்களை த் தெரிவிக்க வேண்டும்.

இன்றைய தேதி வரையில் புவிசார் குறியீடு அங்கீகாரம் தமிழகத்தை சேர்ந்த எத்தனை பொருள்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தைத் தெரிவிக்க வேண்டும்.

புவிசார் குறியீடு அங்கீகாரம் வழங்குவதற்கான கால அவகாசத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா? அத்தகைய திட்டம் ஏதும் இருப்பின் அதைப்பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று தமிழச்சி தங்கபாண்டியன் கோரினார்.

**உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை இணை அமைச்சர் சோம் பார்கஷ் அளித்த பதில் வேணும் வருமாறு.**

31-3-2023 வரையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 57 பொருள்களுக்கு புவிசார் குறியீடு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பொருளுக்கான புவிசார் குறியீடு அங்கீகாரம் கோரி பதிவு செய்யப்படும் விண்ணப்பங்கள் 1999 ஆம் ஆண்டின் பொருள்கள் பதிவு மற்றும் பாதுகாப்புச் சட்ட விதிமுறைகளின் கீழ் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் இதர பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. அங்கீகாரம் கோரி வரும் விண்ணப்பங்களுடன் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் அந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

31-3-2023 வரை தமிழ்நாட்டில் இருந்து புவிசார் அங்கீகாரம் கோரி 27 விண்ணப்பங்கள் வந்துள்ளன. அந்த விண்ணப்பங்களில் இடம்பெற்றுள்ள பொருள்களின் பெயர், தற்போதைய நிலை, அப்பொருள் எந்த வகையைச் சார்ந்தது என்ற விவரம் கீழே அளிக்கப்படுகிறது.

1. விண்ணப்ப எண் 757. கன்னியாகுமரி மட்டி வாழைப்பழம் (விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. வேளாண் வகையைச் சார்ந்தது.)

2. விண்ணப்ப எண் 698. ஜாதெரி நாமக்கட்டி. (விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. கைவினைப் பொருள்)

3. விண்ணப்ப எண் 762. சேடி புட்டா புடவை (விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.ஜவுளி வகையைச் சார்ந்தது)

4. விண்ணப்ப எண் 46 சேலம் மாங்கனி (ஆய்வு. வேளாண் வகையைச் சார்ந்தது)

5. விண்ணப்ப எண் 617 சீரக சம்பா அரிசி. (ஆய்வு வேளாண் வகையைச் சார்ந்தது.

6. விண்ணப்ப எண் 691. உடன்குடி பனங்கருப்பட்டி (ஆய்வு வேளாண் வகையைச் சார்ந்தது)

7. விண்ணப்ப எண் 740. மதுரை மரிக்கொழுந்து. (ஆய்வு வேளாண் வகையைச் சார்ந்தது)

8. விண்ணப்ப எண் 742 ராஜபாளையம் மாங்கனி (ஆய்வு வேளாண் வகையைச் சார்ந்தது)

9. விண்ணப்ப எண் 487. தூத்துக்குடி மேக்ரோன் (ஆய்வு. உணவு வகையைச் சார்ந்தது)

10. விண்ணப்ப எண் 754 விளாச்சேரி களிமண் பொம்மைகள் (ஆய்வு. கைவினைப் பொருள் வகையைச் சார்ந்தது)

11. விண்ணப்ப எண் 410. தம்மம்பட்டி மரவேலைப்பாடுகள் (எதிர்ப்பு. கைவினைப் பொருள்)

12. விண்ணப்ப எண் 817. கும்பகோணம் வெற்றிலை. (முன்னிலை ஆய்வு வேளாண் வகையைச் சார்ந்தது.)

13. விண்ணப்ப எண் 836. பண்ருட்டி பலாப்பழம் (முன்னிலை ஆய்வு வேளாண் வகையைச் சார்ந்தது)

14.விண்ணப்ப எண் 837. பண்ருட்டி முந்திரி (முன்னிலை ஆய்வு வேளாண்மையை சார்ந்தது)

15. விண்ணப்ப எண் 881 புளியங்குடி அமில எலுமிச்சை (முன்னிலை ஆய்வு வேளாண் வகையைச் சார்ந்தது)

16. விண்ணப்ப எண் 882 தூயமல்லி அரிசி (முன்னிலை ஆய்வு வேளாண் பொருள்)

17. விண்ணப்ப எண் 883 விருதுநகர் சம்பா வத்தல் மிளகாய் (முன்னிலை ஆய்வு வேளாண் பொருள்)

18. விண்ணப்ப எண் 920. செட்டிகுளம் சிறிய வெங்காயம் (முன்னிலை ஆய்வு வேளாண் பொருள்)

19. விண்ணப்ப எண் 1051. ராம்நாடு சித்திரைக் கார் அரிசி (முன்னிலை ஆய்வு வேளாண் பொருள்)

20. விண்ணப்ப எண் 1053. சேலம் கண்ணாடி கத்தரிக்காய் (முன்னிலை ஆய்வு வேளாண் பொருள்)

21. விண்ணப்ப எண் 1052. கோவிந்தபாடி நாட்டு சர்க்கரை (முன்னிலை ஆய்வு உணவுப் பொருள்)

22. விண்ணப்ப எண் 770. அம்பாசமுத்திரம் சொப்பு சாமான்கள் (மர பொம்மைகள்) (முன்னிலை ஆய்வு கைவினைப் பொருள்)

23. விண்ணப்ப எண் 816. தோவாளை மாணிக்க மாலை (முன்னிலை ஆய்வு கைவினைப் பொருள்)

24. விண்ணப்ப எண் 880. நாமக்கல் மாக்கல் (மாவுக்கல்) (முன்னிலை ஆய்வு கைவினைப் பொருள்)

25. விண்ணப்ப எண் 1040 சேலம் கொலுசு (முன்னிலை ஆய்வு கைவினைப் பொருள்

26. விண்ணப்ப எண் 872. ஆத்தங்குடி (டைல்ஸ்) ஓடுகள் (முன்னிலை ஆய்வு. தயாரிக்கப்படுபவை)

27. விண்ணப்ப எண் 857 உறையூர் பருத்தி சேலைகள் (முன்னிலை ஆய்வு ஜவுளி வகையைச் சார்ந்தது)

******